**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>MCOP NO.45/2021 பாலமுருகன் (மசா1) தேதி:18.09.2025</u>**

**<u>மசா.1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

2018ம்வருடம் 10வது மாதம் வாகனவிபத்து நடந்தது. தேதி எனக்கு நியாபகம் இல்லை. அந்த விபத்தானது பெங்களூருவில் உள்ள தொட்டபல்லாபுராவில் காலை 6.30மணியளவில் நடந்தது. அந்த சமயத்தில் நான் ஓசூரில் இருந்த பெங்களூரு நோக்கி TN 70 T 8066 என்ற பதிவு எண் கொண்ட கண்டேய்னர் வாகனத்தை ஓட்டிச்சென்றேன். அப்போது எதிரே வந்த டிப்பர் லாரி மோதிவிட்டது. அந்த லாரியின் பதிவுஎண்.7070 ஆகும். அந்த டிப்பர் லாரி எதிர்திசையில் வந்தது. விபத்து சமயத்தில் எனது மாதவருமானம் ரூ.30ஆயிரம் என கூறியுள்ள நிலையில் அதை நிருபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்தசமயத்தில் மாதத்திற்கு ஒருமுறை ரொக்கமாக சம்பளம் கையில் கொடுத்துவிடுவார்கள். எழுத்துமூலமான ஆவணம் எதுவும் இல்லை. நான் மனுவில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தில் வேலைபார்த்தது சம்பந்தமான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது ஓட்டுநர் உரிமம் மற்றும் சிறப்பு வில்லை இந்தவழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். விபத்துசமயத்தில் நான் ஓட்டிச்சென்ற கண்டேய்னர் வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீடு நிறுவனம் இந்தவழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தினால் நான் ஓட்டிச்சென்ற கண்டேய்னர் வாகனத்திற்கு என்ன சேதாரம் ஏற்பட்டது என்பது குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற கண்டேய்னர் வாகனத்திற்கு என்ன சேதாரம் சம்பந்தமாக எதிரே வந்த டிப்பர் லாரி காப்பீடு நிறுவனத்திடம் இழப்பீடு கோரப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. விபத்துசமயத்தில் அந்த கண்டேய்னர் வாகனத்தை அந்தபகுதியில் ஓட்டுவதற்கு அனுமதி உள்ளதா என்றால் உள்ளது. எதிரே டிப்பர் லாரியை ஓட்டிவந்த ஓட்டுநரின் உரிமம், காப்பீடு ஆவணம் பதிவுச்சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகல் தாக்கல் செய்துள்ளேன். அந்த டிப்பர் லாரியை ஓட்டிவந்த ஓட்டுநருக்கு இலகுரக வாகனங்களை ஓட்டுவதற்கு மட்டுமே உரிமம் உள்ளது என்றாலும் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு உரிய உரிமம் இல்லை என்றாலும் எனக்கு தெரியாது. அந்த டிப்பர்லாரியின் தகுதிச்சான்று தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். எனது ஊனத்தன்மையை நிருபணம் செய்ய நான் மருத்துவர் குழு முன்பு ஆஜர் படுத்தப்பட்டேனா என்றால் நான் ஆஜர்படுத்தப்படவில்லை. ஆனால் எனது ஊனத்தன்மை சம்பந்தமாக நான் சான்று வாங்கியுள்ளேன். எனது சிகிச்சை சம்பந்தமான மருத்துவ பரிந்துரை சீட்டுகள் இந்தவழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவபில்களில் பணம் செலுத்தப்பட்டது என்பதற்குரிய குறிப்பு அதில் இல்லை என்றால் சரியல்ல. ஒரேதேதியில் ஒரேவிதமான மருந்துகள் வாங்கப்பட்டதாக மருத்துவபில்களில் துலங்குகிறது என்றால் சரியல்ல. மசாஆ.5 ல் நான் 2 மாதங்கள் ஓய்வுஎடுத்தால் குணமாகிவிடும் என மருத்துவர் குறிப்புரை குறிப்பிட்டுள்ளார் என்றால்

சரிதான். மசாஆ.3 ல்விபத்து நடந்ததேதியாக 02.10.2018 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மனு மற்றும் இதரஆவணங்களில் விபத்துதேதியாக 29.10.2018 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்துநடந்தசாலை 4 வழிச்சாலை கிடையாது. அந்தசாலையின் நடுவே ஒருஅடி உயரத்திற்கு தடுப்புச்சுவர் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. விபத்துநடந்தஇடத்திலும் அவ்வாறு தடுப்புசுவர் கிடையாது. எதிரே வந்த டிப்பர் வாகனம் நான் ஓட்டிச்சென்ற வாகனத்தை விட அதிக சக்கரங்கள் உள்ள வாகனம் என்றால் சரிதான். விபத்துநடந்தஇடம் சம்பந்தமாக காவல்துறை தயார்செய்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் இந்தவழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை தாக்கல் செய்தால் விபத்து நடந்தசாலை 100 அடிஅகலசாலை என்பது தெரிந்துவிடும் என்பதற்காகவே நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. சாதாரணமான சாலைகளில் பல சக்கரங்களை கொண்ட கனரக வாகனம் எளிதாக செல்லமுடியாது என்றால் சரிதான். விபத்துநடந்த சாலை மிக அகலமானது என்றாலும் அந்தசாலையின் நடுவே தடுப்புச்சுவர் இருந்தது என்றாலும் எதிரேவந்த வாகனம் அந்தநிலையில் வேகமாக செல்லவாய்ப்பு இல்லை என்றாலும் அந்தவாகனத்தின் கவனக்குறைவால் விபத்துநடந்ததாக கூறுவது ஏற்புடையது இல்லை என்றாலும் சரியல்ல. மேற்படி விபத்திற்கு நானே காரணம் என்றால் சரியல்ல. நான் வேலை நிமித்தம் பணியில் இருந்தபோது விபத்து நடந்ததால் எனக்குரிய இழப்பீடை எனது உரிமையளார் இடம்தான் கோரமுடியும் என்றாலும் அந்தவாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் அதன்உரிமையார் தான் எனக்குரிய இழப்பீடு தொகையை வழங்கவேண்டும் என்றாலும் சரியல்ல. மருத்துவகூற்றின் படி எனது ஊனம்

உடற்பயிற்சி மூலம் சரிசெய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல. நான் பலதலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றாலும் ஒரே தலைப்பின் கீழ் மீண்டும் மீண்டும் இழப்பீடு கோரியுள்ளது ஏற்புடையது அல்ல என்றாலும் சரியல்ல. ஊட்டச்சத்து, போக்குவரத்து செலவு, பொருட்சேதம் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் எனக்கு எந்தஇழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டுநிறுவனம் தான் எனக்குரிய இழப்பீடை கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம்எதிர்மனுதாரை பொறுத்து இந்தமனு தள்ளுபடிசெய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.